DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 77/2024 |
| Deposition of witness | : | PW.1 |
| Name | : | அசோகன் |
| Father’s /Husband Name | : | பாலு |
| Village | : | மேலதண்டம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 44 |
| Occupation | : | லாரி ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day May, 2025.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் மேலதண்டம் கிராமத்தில் குடியிருந்து லாரி ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2024 ம் வருடம் தேதி சரியாக நினைவில்லை ஒரு நாள் இரவு 07.30 மணியளவில் எனது லாரியை மாப்பிள்ளைக்குப்பத்திலுள்ள குளத்தில் நிறுத்திவிட்டு மறுநாள் காலை வந்து பார்த்போது லாரியில் இரண்டு அமரான் பேட்டரிகள் திருட்டு போய் இருந்தது. அதை திருடியவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அது தொடர்பாக போலிசாரிடம் கூறினேன். அவர்கள் என்னிடம் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுததான். அந்த புகார் மனுவிலுள்ள எனது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 22.07.2024 ம் தேதி அதிகாலை 05.00 மணியளவில் TN 69 AZ 3366 என்ற லாரியை எடுப்பதற்காக நான் வந்தபோது இவ்வழக்கின் எதிரிகள் இரண்டு பேரும் எனது லாரியில் இருந்த இரண்டு அமரான் பேட்டரிகளையும் திருடிக்கொண்டு ஓடினார்கள் என்றும், அவர்களில் 1 வது எதிரியை நான் கையும் களவுமாக பிடித்தேன் என்றும் 2 வது எதிரி தப்பித்து ஓடினார் என்றும் புகார் மனு அளித்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

குறுக்கு விகாரணை இல்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.05.14 03:30:13 +0530